முடிந்தவுடனேயே, அதன் நகலை எடுத்துக்கொண்டு, என்னை டெல்லிக்கு நேரடியாகச் சென்று, இந்த 5 சுங்கச்சாவடிகளில் சுங்கக் கட்டணம் வசூலிக்கப்படுவதை கட்டாயம் இரத்து செய்ய வேண்டும் என்று சொல்லச் சொல்லியிருக்கிறார்கள். ஏனென்றால், நீங்கள் போட்ட விதி அப்படித்தான் சொல்கிறது. மாநகராட்சியாக இருந்தாலும், நகராட்சியாக இருந்தாலும், 10 கி.மீ.-க்கு உட்பட்டு இருந்தால் அந்தச் சுங்கச்சாவடியை எடுத்துவிட வேண்டும் என்று 2008 ஆம் ஆண்டு நீங்கள் போட்ட விதியிலே இருக்கிறது என்பதை நீங்கள் சுட்டிக்காட்டி, அதை இரத்து செய்ய வேண்டும் என்று சொல்லச் சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சட்டமன்றக் கூட்டத்தொடர் முடிந்தவுடனேயே, அதன் நகலை எடுத்துக்கொண்டு, நேரடியாக டெல்லிக்குச் சென்று ஒன்றிய அரசிலே இருக்கிற மத்திய அமைச்சர் மாண்புமிகு திரு. நிதின் கட்கரி அவர்களை வலியுறுத்தி, இந்த 5 சுங்கச்சாவடிகளை எடுத்துவிடுவதற்கு முதலில் முயற்சி எடுப்போம். ஏற்கெனவே கேரளாவிலே அதிகமான சுங்கச்சாவடிகள் இருந்தன. இப்போது அங்கு 3 சுங்கச்சாவடிகள்தான் இருக்கின்றன. அங்கிருக்கிற அந்த கிலோ மீட்டரையும் தமிழ்நாட்டில் இருக்கிற இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கிலோ மீட்டரையும் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, இங்கு 16 சுங்கச்சாவடிகள்தான் சட்டப்படி இருக்க வேண்டும். ஆனால், இங்கே 48 சுங்கச்சாவடிகள் இருக்கின்றன. இதையும் நாங்கள் அறிந்திருக்கிறோம். எனவே, இரண்டாவது கட்டமாக அதையும் வலியுறுத்தி, இரத்துச் செய்வதற்கு இந்த அரசாங்கம் முயற்சி செய்யும் என்பதை இந்த நேரத்திலே பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–15

6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

பதிவுச் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2021 ஆம் ஆண்டு பதிவுச் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) அதுதான் உங்கள் பெயரையும் சொல்லிவிட்டோமே. அதாவது, tollgate என்றால், திரு. ஜி.கே. மணி அவர்களும், திரு. வேல்முருகன் அவர்களும்தான். இரண்டுபேர் பெயரும் பதிவாகிவிட்டது.

2021 செப்டம்பர் 2]

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு பதிவுச் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

7. மானியக் கோரிக்கைகள், 2021–2022, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 44–குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

(ஆ) கோரிக்கை எண் 19 – மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை

(அ) கோரிக்கை எண் 44–குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021–2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக்*